பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

23 05 2024 7 15

வியாழகிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களவைக்கு ஆறாவது கட்டமாக தேர்தல் நடைபெறவுள்ள 57 தொகுதிகளில் பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.
2. புத்த பூர்ணிமா இன்று கொண்டாடப்படுவதையொட்டி குடியரசுத் தலைவர், குடியரசு துணைத்தலைவர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.
3. இங்கிலாந்தில் பொதுத் தேர்தல் ஜூலை மாதம் நான்காம் தேதி நடைபெறும் என அந்நாட்டு பிரதமர் திரு ரிஷி சுனக் அறிவித்துள்ளார்.
4. சர்வதேச சூரிய கூட்டமைப்பில் 99-வது உறுப்பு நாடாக ஸ்பெயின் இணைந்துள்ளது.
5. ப்ரோ ஹாக்கி லீக் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா, அர்ஜெண்டினாவை வென்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

மக்களவைக்கு ஆறாவது கட்டமாக தேர்தல் நடைபெறவுள்ள தொகுதிகளில் பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.

ஏழு மாநிலங்களில் இடம்பெற்றுள்ள 57 தொகுதிகளில் நாளை மறுநாள் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

பீகாரில் எட்டு தொகுதிகள், ஹரியானாவில் பத்து, ஜார்க்கண்டில் நான்கு, ஒடிஸாவில் ஆறு, உத்திரபிரதேசத்தில் 14, மேற்குவங்கத்தில் எட்டு, தில்லியில் ஏழு தொகுதிகளில் தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்த தொகுதிகளில் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும், வேட்பாளர்களும் இறுதிக்கட்ட வாக்குசேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி தில்லியில் நேற்று வாக்கு சேகரித்தார்.

அப்போது பேசிய அவர், காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் நாட்டிற்கு அநீதி இழைத்து விட்டதாகவும், அக்கட்சியின் தலைவர்கள் குற்றச்செயல்களில் ஈடுபட்டதாகவும் கூறினார்.

நாட்டின் தேவையை பிஜேபி அரசால் மட்டுமே நிறைவேற்ற முடியும் என்று அவர் தெரிவித்தார்.

60 ஆண்டு ஆட்சிக்காலத்தில் காங்கிரஸ் அரசால் 70 விமான நிலையங்கள் மட்டுமே கட்ட முடிந்ததாகவும், தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு பத்து ஆண்டுகளில் 70 புதிய விமான நிலையங்களை ஏற்படுத்தியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சாலை கட்டமைப்பு வசதிகளும் தமது ஆட்சிக் காலத்தில் மேம்படுத்தப்பட்டதாக திரு நரேந்திரமோடி கூறினார்.

[]<<<>>>[]

காங்கிரஸ் பொதுச்செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி ஜார்க்கண்ட் மாநிலம் கோடாவில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

வேலைவாய்ப்பின்மை, பணவீக்கம் குறித்து பிஜேபி எந்த கருத்தும் தெரிவிப்பதில்லை என்று அவர் குற்றம்சாட்டினார்.

தேர்தலில் போட்டியிடுவதை தடுக்க காங்கிரஸ் கட்சியின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

கடந்த பத்து ஆண்டுகளில் மேற்கொண்ட பணிகள் குறித்தும், மீண்டும் ஆட்சிக்கு வந்தால் அடுத்த ஐந்து ஆண்டுகளில் செய்யவுள்ள பணிகள் குறித்தும் பிஜேபி தலைவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று திருமதி பிரியங்கா காந்தி வலியுறுத்தினார்.

ஆம் ஆத்மி ஒருங்கிணைப்பாளரும், தில்லி முதலமைச்சருமான திரு அரவிந்த் கெஜ்ரிவால் தில்லியின் பல்வேறு தொகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்போது வழக்கறிஞர்களிடையே பேசிய அவர், ஜனநாயகம் மற்றும் அரசியலமைப்புச் சட்டத்தை பாதுகாப்பதில் வழக்கறிஞர்கள் முக்கிய பங்கு வகிப்பதாகத் தெரிவித்தார்.

ஆறாவது கட்ட தேர்தலில் ஒடிஸாவில் ஆறு மக்களவைத் தொகுதிகளிலும், 42 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

பிஜூ ஜனதாதள் தலைவரும், ஒடிஸா முதலமைச்சருமான திரு நவின் பட்நாயக், பிஜேபி தலைவை் திரு ஜெ பி நட்டா, அஸ்ஸாம் முதலமைச்சர் திரு ஹிமந்த விஸ்வா சர்மா உள்ளிட்டோர் அம்மாநிலத்தில் பிரச்சாரம் மேற்கொள்கின்றனர்.

இதனிடையே ஏழாவது மற்றும் இறுதிக் கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 57 தொகுதிகளில் பிரச்சாரம் விறுவிறுப்படைந்தள்ளது.

[]<<<>>>[]

புத்த பூர்ணிமா இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், நாட்டு மக்களுக்கும், உலகெங்கிலும் வாழும் புத்தரின் போதனைகளை பின்பற்றுபவர்களுக்கும் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

கருணையின் வடிவமான புத்தர் உண்மை, அஹிம்சை, நல்லிணக்கம், மனித சமுதாயம் மற்றும் அனைத்து உயிரினங்கள் மீதும் அன்பு செலுத்துதல் ஆகியவற்றை வலியுறுத்தியதாக அவர் கூறியுள்ளார்.

சமூக நல்லிணக்கத்தை வலுப்படுத்தி பகவான் புத்தரின் போதனைகளை நமது வாழ்வில் கடைபிடித்து நாட்டை கட்டமைக்க உறுதியேற்போம் என்று கூறியுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், பகவான் புத்தரின் போதனைகளை கடைபிடித்து நமது எண்ணங்களிலும், செயல்களிலும் அதை பின்பற்றி மனித சமுதாயத்தின் நல்வாழ்வுக்காக உறுதியேற்போம் என்று குறிப்பிட்டுள்ளார்.

நேபாள நாட்டின் லும்பினி என்ற இடத்தில் இந்திய தூதரகத்தின் சார்பில் புத்த பூர்ணிமா நேற்று கொண்டாடப்பட்டது.

இதில் இந்தியா மற்றும் நேபாள நாட்டைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கை தலைநகர் கொழும்புவில் புத்த பூர்ணிமா இன்று முதல் நான்கு நாட்களுக்கு கொண்டாடப்படுகிறது.

[]<<<>>>[]

பாதுகாப்புத் துறையில் தகவல் தொடர்பு தொழில்நுட்ப மாநாடு புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

இதில் பங்கேற்று பேசிய தொலைத் தொடர்புத்துறையின் டிஜிட்டல் தொடர்பு ஆணைய உறுப்பினர் திருமதி மது அரோரா, இந்திய தொலைத் தொடர்புத்துறை சமீப காலமாக குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளதாக தெரிவித்தார்.

உள்நாட்டில் தயாரிக்கப்படும் தொலைத் தொடர்பு உபகரணங்கள் 70 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இத்துறையில் இந்தியாவின் ஏற்றுமதி 35 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீரின் பாதுகாப்பு சூழல் தொடர்பாக ராணுவ உயரதிகாரி ஜெனரல் நவின் சச்தேவா, காவல்துறை தலைமை இயக்குநர் திரு ஆர் ஆர் ஸ்வைன் ஆகியோர் ஆலோசனை மேற்கொண்டனர்.

பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்வதற்காக மேற்கொள்ள வேண்டிய தயார் நிலை குறித்தும் இந்த உயர்நிலைக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

தற்போதைய பாதுகாப்பு நிலைமை குறித்தும் இக்கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டது.

**[]<<<>>>[]**

சர்வதேச சூரிய கூட்டமைப்பில் 99-வது உறுப்பு நாடாக ஸ்பெயின் இணைந்துள்ளது.

இதற்கான ஒப்பந்த ஆவணங்களை இந்தியாவுக்கான ஸ்பெயின் தூதர் ஜோஸ் மரியா அளித்ததாக வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பாளர் திரு ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்தார்.

எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்ய சூரிய சக்தி தொழில்நுட்ப பயன்பாட்டை அதிகரிக்கும் நோக்கில் சர்வதேச சூரிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

இங்கிலாந்தில் பொதுத் தேர்தல் ஜூலை மாதம் நான்காம் தேதி நடைபெறும் என்று அந்நாட்டு பிரதமர் திரு ரிஷி சுனக் அறிவித்துள்ளார்

தமது பதவிக்காலம் முடிவடைவதற்கு பல மாதங்கள் உள்ள நிலையில் முன் கூட்டியே தேர்தலை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதையடுத்து இங்கிலாந்து நாடாளுமன்ற பணிகள் நாளை முதல் நிறுத்தி வைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

தீவிரவாதத்தை எதிர்கொள்வது குறித்து விவாதிப்பதற்காக இந்தியா - இங்கிலாந்து கூட்டு பணிக்குழுக் கூட்டம் நேற்று புதுதில்லியில் நடைபெற்றது.

இந்திய தரப்பில் வெளியுறவு அமைச்சக இணைச்செயலாளர் திரு கே டி தேவால், இங்கிலாந்து தரப்பில் திரு கிறிஸ் ஃபெல்டன் ஆகியோர் தலைமையிலான பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

தீவிரவாத செயல்களை இரு நாடுகளும் இணைந்து முறியடிப்பது குறித்து அப்போது விவாதிக்கப்பட்டது.

தீவிரவாதத்தை ஒடுக்குவதற்கு சர்வதேச ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் இந்த கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

[]<<<>>>[]

பருவநிலை மாற்றம் குறித்த சர்வதேச மாநாடு நேபாள் தலைநகர் காட்மண்டுவில் நேற்று நடைபெற்றது.

இதில் 25 நாடுகளைச் சேர்ந்த நிபுணர்கள் பங்கேற்று தங்கள் கருத்துக்களை தெரிவித்தனர்.

சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், மலைப்பிரதேச நாடுகள் மற்றும் சிறிய தீவுகளின் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

மலைப்பிரதச நாடுகளில் பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் விளைவுகள் குறித்து இதில் முக்கியமாக விவாதிக்கப்பட்டது.

[]<<<>>>[]

பஞ்சாப், ஹரியானா, சண்டிகர், தில்லி உள்ளிட்ட வடமாநிலங்களின் பெரும்பாலான பகுதிகளில் அடுத்த நான்கு நாட்களுக்கு கடும் வெப்பம் நிலவக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

ராஜஸ்தானில் மாநிலத்தில் நேற்று கடும் வெப்பம் நிலவியது.

அதிகபட்ச வெப்பநிலை இரண்டு டிகிரி செல்சியஸ் அதிகரித்து காணப்பட்டது.

பார்மர் பகுதியில் அதிகபட்சமாக 48 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவாகியுள்ளது.

இதனிடையே கேரளாவில் கனமழை தொடரும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பத்தனம்திட்டா மற்றும் இடுக்கி மாவட்டங்களில் சிவப்பு எச்சரிக்கையும், பத்து மாவட்டங்களுக்கு ஆரஞ்ச் எச்சரிக்கையும், இரண்டு மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு காரணமாக பல மாவட்டங்களில் இரவு நேரப் பயணத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

கேரள கடல் பகுதிக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என வானிலை ஆய்வு மையம் அறிவுறுத்தியுள்ளது.

லட்சத்தீவு மற்றும் கர்நாடக கடலோரப் பகுதிகளில் மீனவர்கள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

கனமழை காரணமாக கேரள சுகாதாரத்துறை இயக்குநரகத்தில் கட்டுப்பாட்டு அறை திறக்கப்பட்டுள்ளது.

நோய் பரவுவதை தடுக்க சுகாதாரத்துறையின் சார்பில் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

பெல்ஜியத்தில் நடைபெற்று வரும் ப்ரோ ஹாக்கி லீக் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா பெனால்டிசூட் முறையில் ஐந்து – நான்கு என்ற கோல் கணக்கில் அர்ஜெண்டினாவை வென்றது.

மகளிர் பிரிவில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் இந்தியா – பெர்ஜியத்தை எதிர்கொள்கிறது.

நெதர்லாந்தில் நடைபெற்று வரும் 21 வயதுக்கு உட்பட்டோருக்கான ஹாக்கிப் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா இரண்டு - மூன்று என்ற கோல் கணக்கில் பெல்ஜியத்திடம் தோல்வியடைந்தது.

[]<<<>>>[]

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் அணி இரண்டாவது தகுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

அகமதாபாத்தில் நடைபெற்ற எலிமினேட்டர் சுற்றில் அந்த அணி நான்கு விக்கெட் வித்தியாசத்தில் பெங்களூரு அணியை வென்றது.

முதலில் பேட் செய்த பெங்களூரு அணி நிர்.ணயிக்கப்பட்ட 20 ஓவரில் எட்டு விக்கெட் இழப்புக்கு 172 ரன் எடுத்தது.

பின்னர் களமிறங்கிய ராஜஸ்தான் அணி 19 ஓவரில் ஆறு விக்கெட் இழப்புக்கு 174 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

இதையடுத்து நாளை சென்னையில் நடைபெறவுள்ள இரண்டாவது தகுதிச் சுற்று ஆட்டத்தில் ராஜஸ்தான் அணி – ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**

பிரான்ஸில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் யூகி பாம்ரி – பிரான்ஸின் **Albano Olivetti** இணை அரை இறுதிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-3, 7-6 என்ற செட் கணக்கில் நெதர்லாந்தின் சாண்டர் - மிடில் கூப் இணையை வென்றது.

**[]<<<>>>[]**

**Kachreti** சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - துருக்கியின் **Yanki Erel** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஜார்ஜியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-3, 6-2 என்ற செட் கணக்கில் ரஷ்யாவின் பாப்ரோ – லோபாநோவ் இணையை வென்றது.

***End of News***